## பத்தாம் வகுப்பு தமிழ் தேர்வு - 5

1. "பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈராகத் தொண்ணூற்றாறு என்னும் தொகையாம்" என்று முதலில் மொழிந்தது
[A] சதுரகராதி [B] யாப்பெருங்கலம்
[C] பிரபந்த மரபியல் [D] பிரபுலிங்கலீலை

2. "இலக்கண நூல்கள்" பற்றி சரியானதைத் தேர்க
I. "இலக்கணக்கொத்து" சுவாமிநாத தேசிகர் படைப்பு
II. "இலக்கண விளக்க சூறாவளி" சுவாமிநாத தேசிகர்
III. "தொன்னூல் விளக்கம்" வீரமாமுனிவர்
IV. "முத்து வீரியம்" சுப்ரமணிய தீட்சிதர்
[A] I,II,III,IV [B] I, II, III
[C] I, IV [D] I, III, IV

3. பிள்ளைத்தமிழில் பாட்டுடைத் தலைவரின் பிறப்பு பற்றிக் கூறுவது ____________
[A] பிள்ளைத்தமிழ் [B] சதகம்
[C] வாரானை [D] சாதகம்

4. தமிழில் தோன்றிய முதல் முழுமையான "பிள்ளைத்தமிழ்" எதுவெனத் தேர்க
[A] "கண்ணனை" பற்றி பெரியாழ்வார் பாடியது
[B] இராமனைப்பற்றி குலசேகராழ்வார் பாடியது
[C] ஒட்டக்கூத்தரின் குலோத்துங்கன் பிள்ளைத்தமிழ்
[D] நாச்சியார் திருமொழியில் "சிற்றில் சிதைத்தல்"

5. ____________ தெய்வத்தின் மீது பிள்ளைத்தமிழ் பாடப்படுவதில்லை ____________
[A] சிவபெருமான் [B] அனுமன்
[C] சேயோன் [D] மாயோன்

6. "பிள்ளைத்தமிழ்" சரியானதைத் தேர்வு செய்க ?
I. மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் - மீனாட்சி சுந்தரம்
II. முத்துக் குமாரசாமி பிள்ளைத்தமிழ் - குமரகுருபரர்
III. காந்தியம்மை பிள்ளைத்தமிழ் - சொக்கநாதர்
IV. அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் - சிவஞானம்
[A] I, III, IV [B] I, II, III
[C] I, II, IV [D] II, III, IV

7. காளிதாசர் எழுதிய "மேகசந்தேசம்" எவ்வகை நூல்
[A] தூது [B] உலா
[C] அந்தாதி [D] பரணி

8. தலைவி தலைவனிடம் தூது அனுப்புதலே தொடர்ந்து வரும் வழக்காய் உள்ளது "தூது முனிவின்மை" என்று எந்த நூலில் கூறப்பட்டுள்ளது ____________
[A] தொல்காப்பியர்
[B] புறநானூறு
[C] நற்றிணை [D] விரலிவிடுதூது

9. ஔவையார் அதியன் வேண்டுகோட்படி தொண்டை மானிடம் தூது ஏகியமை எந்த நூலில்கூறப்பட்டுள்ளது
[A] நற்றிணை [B] குறுந்தொகை
[C] புறநானூறு [D] கலித்தொகை

10. பகைவர்களிடம் தூது அனுப்ப பயன்படுத்தப்பட்ட விலங்கினம் எது ?
[A] கழுதை [B] காக்கை
[C] கடா எருமை [D] காலணி

11. பின்வருவனவற்றுள் பொருந்த ஒன்றைத் தேர்க
[A] பேதை, பெதும்பை
[B] மங்கை, மடந்தை
[C] விடலை, திறலோன்
[D] அரிவை, தெரிவை

12. "ஊரோடு தோற்றமும் உரித்தென மொழிப வழக்கோடு சிவணிய வகைமையான" தொல்காப்பியம் எதைப்பற்றி கூறுகிறது ____________
[A] கோவை [B] உலா
[C] அந்தாதி [D] பரணி

13. தமிழில் தோன்றிய முதல் உலா நூல் எது ? "ஆதி உலா" என்றும் அழைக்கப்படும் ____________
[A] திருக்கயிலாயஞான உலா [B] மூவருலா
[C] ஆளுடைய பிள்ளையார் உலா [D] பூவநாதர் உலா

14. பின்வருவனவற்றுள் "அந்தாதி" சரியானது எது / எவை
I. ஒரு பாடலின் முடிவை அடுத்த பாடலின் தொடக்கமாக வைத்து மாலை போல் தொடுப்பதாகும்
II. இதனைச் "சொற்றொடர் நிலை" என்றும் கூறுவர்
III. அந்தாதி சங்க இலக்கியம் தேவாரம், திருவாசகம், நாலாயிர திவ்விய பிரபந்தத்தில் காணமுடிகிறது
IV. தனியந்தாதிக்கு எ.க மீனாட்சி சுந்தரம் பிள்ளை மட்டும் 16 அந்தாதி பாடியுள்ளார்
[A] I,II,III,IV [B] I, III, IV
[C] II, III, IV [D] I, II, III

15. "இராசராச சோழன் உலா" வை இயற்றியவர் ஒட்டக்கூத்தர் இதற்கு அவர் பெற்ற பரிசு என்ன ?
[A] ஆயிரம் யானை [B] ஆயிரம் ஊர்
[C] ஆயிரம் பொன் [D] ஆயிரம் பொற்பந்தம்

16. பின்வரும் "அந்தாதியில்" பொருந்தாத ஒன்று
[A] அற்புதத்திருவந்தாதி - காரைக்கால் அம்மையார்
[B] திருத்தொண்டர் திருவந்தாதி - நம்பியாண்டார் நம்பி
[C] சடகோபரந்தாதி - கம்பர்
[D] கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி - கண்ணதாசன்

ARIVU TRUST

17. "கலம்பகம்" யாரார் மீது எத்தனைப்பாடல் பாட வேண்டும் என்று பாட்டியல் நூல் கூறுவதில் தவறானது
[A] தேவர் - 100 [B] அமைச்சர் -75
[C] அரசர் - 90 [D] முனிவர் - 95

18. முதலில் தோன்றிய கலம்பக நூல் எது ? "காடவன்"
[A] நந்திக் கலம்பகம் [B] கச்சிக் கலம்பகம்
[C] திருவரங்க கலம்பகம் [D] கந்தவனக்கலம்பகம்

19. "ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மாணவனுக்கு வகுப்பதுப் பரணி" என்று எந்த இலக்கணநூல் பகரும்
[A] தொல்காப்பியம்
[B] இலக்கணவிளக்கம்
[C] இலக்கணவிளக்க சூறாவளி
[D] தொன்னூல் விளக்கம்

20. "பரணியின் யாப்பு தாழிசை" "தரவின்றாகித் தாழிசை பெற்றும்" என்றும் எந்த இலக்கண நூல் கூறுகிறது
[A] தொல்காப்பியம்
[B] இலக்கணவிளக்கம்
[C] இலக்கணவிளக்க சூறாவளி
[D] தொன்னூல் விளக்கம்

21. முதலாம் குலோத்துங்க சோழனுக்கும், அனந்தவர்ம கோடங்கங்கன் என்னும் கலிங்க மன்னனுக்கும் இடையே நடந்த போரை விளக்கிக் கூறுவது ________
[A] கலிங்கத்துப்பரணி [B] தக்கயாகப்பரணி
[C] பாசவதைப்பரணி [D] இரணியவதைப்பரணி

22. இயல், இசை, நாடகம், என்ற முத்தமிழும் ஒருங்கே கொண்டிருப்பது ________
[A] அந்தாதி [B] குறவஞ்சி
[C] தூது [D] பள்ளு

23. பின்வருவனவற்றுள் தவறான ஒன்றைத் தேர்க
[A] சரபேந்திர பூபாலக்குறவஞ்சி - சிவகொழுந்துதேசிகர்
[B] தமிழரசிகுறவஞ்சி - வரத நஞ்சியப்பிள்ளை
[C] பெத்லகேம் குறவஞ்சி - வீரமாமுனிவர்
[D] திருகுற்றால குறவஞ்சி - திரிகூடராசப்ப கவிராயர்

24. பள்ளு இலக்கிய வகையில் முதலில் தோன்றியது
[A] முக்கூடற்பள்ளு [B] திருவாரூர் பள்ளு
[C] வைசியப்பள்ளு [D] திருச்செந்தூர் பள்ளு

25. பொருத்துக :
[A] சமுத்திரவிலாசம் - அருணாச்சலகவிராயர்
[B] நைடதம் - காளமேகப்புலவர்
[C] மதுரைப்பதிற்றுப்பத்து - அதிவீரராமபாண்டியர்
[D] அனுமார் பிள்ளைத்தமிழ் - பரஞ்சோதி முனிவர்

[A] 4 3 2 1 [B] 4 2 3 1
[C] 2 3 4 1 [D] 4 3 1 2

26. "வெண்பாவிற்கு" ________
[A] புகழேந்தி [B] ஒட்டக்கூத்தர்
[C] வீரமாமுனிவர் [D] நச்சினார்கினியர்

27. வைணவத்துக்கு "நாதமுனிகள்" போன்று சைவத்துக்கு
[A] சிற்றம்பலநாடிகள்
[B] சிவஞானமுனிவர்
[C] ஆத்திரேய இராமானுசன்
[D] அருணகிரிநாதர்

28. பின்வருவனவற்றுள் தவறானது எது ? "காளமேகம்"
I. கவிமழை பொழிவதால் காளமேகம்அழைக்கப்பட்டார்
II. இயற்பெயர் "வரதன்" நந்திகிராமம், கும்பகோணம்
III. பிறரை இகழ்தலால்"வசைகவி" என அழைக்கப்பட்டார்
IV.இவர் பாடல்களில் நகைச்சுவையும், சிலேடையும்மிகுதி
[A] I [B] II
[C] III [D] எதுவுமில்லை

29. "குட்டித்தொல்காப்பியம்" என்று அழைக்கப்படுவது "இலக்கண விளக்கம்" - எழுதியவர் யார் ?
[A] வீரமாமுனிவர் [B] சிவஞானமுனிவர்
[C] வைத்தியநாததேசிகர் [D] சேக்கிழார்

30. "வரகவி", "மதுரகவிராசன்" என்று புகழப்படுபவர் யார் ?
[A] உமறுப்புலவர் [B] காசிம்புலவர்
[C] செய்குத்தம்பிபாவலர் [D] உமறுப்புலவர்

31. **Make hay while the Sun shines** - தமிழாக்கம் என்ன ?
[A] சிறு துரும்பும் பல் குத்த உதவும்
[B] இக்கரைக்கு அக்கரை பச்சை
[C] காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
[D] அளவுக்கு மீறினால் அமுதமும் நஞ்சு

32. பொருத்துக : (தமிழகத்திலுள்ள பழமையான நூலகம்)
[A] தமிழ் பலகலை நூலகம் (1) 1981
[B] அண்ணாமலை நூலகம் (2) 1929
[C] சரசுவதி மகால் நூலகம் (3) 1820
[D] உ.வே.சா நூலகம் (4) 1947 (1942)
[A] 3 2 4 1
[B] 1 3 4 2
[C] 3 1 4 2
[D] 1 2 3 4

33. "இந்திய நூலகத் தந்தை" ________
[A] ரங்கநாதன் [B] அருணாச்சலம்
[C] வைத்தியநாதன் [D] அரங்கநாதன்

ARIVU TRUST

**34.** பொருத்துக :

[A] வினையே ஆடவர்க்குயிர் (1) குறுந்தொகை
[B] முந்நீர் வழக்கம் மகடூஉ (2) திருமூலர்
[C] உடம்பை வளர்த்தேன் (3) தொல்காப்பியம்
[D] விரல்கள் பத்தும் (4) தாராபாரதி

[A] 1 3 2 4 [B] 1 3 4 2
[C] 3 4 2 1 [D] 1 2 3 4

**35.** பின்வருவனவற்றை சொற்றொடரில் அமைத்து எழுதுக

[A] கற்றலுக்கு ஏற்றது மாணவப் பருவம்
[B] ஏற்றது கற்றலுக்கு மாணவப் பருவம்
[C] கற்றலுக்கு ஏற்றதா மாணவப் பருவம்
[D] மாணவப் பருவம் கற்றலுக்கு ஏற்றது

**36.** "தேவர் அனையர் கயவர் அவருந்தாம் மேவன செய்தொழுக லான்" எவ்வகை அணியைத் தேர்க

[A] தற்குறிப்பேற்ற அணி
[B] வஞ்சப்புகழ்ச்சி அணி
[C] செம்மொழிச் சிலேடை
[D] பொருள் பின்வருநிலையணி

**37.** பின்வருவனவற்றுள் எது / எவை சரி

[i] சங்க காலத்தில் போருளீட்டுவோர் - ஆண்கள்
[ii] சங்ககாலத்தில் பெண்கள் கடல்கடந்து செல்லக்கூடாது
[iii] கால்கள் இரண்டு படைத்தவன் நீ - நிற்க நேரமில்லை
[iv] புரட்சி முழக்கம், உரைவீச்சு - சாலை.இளந்திரையன்

[A] i, ii, iii, iv சரி [B] iii, iv சரி
[C] i, iii சரி [D] i, iv சரி

**38.** தம் வாழ்நாள் முழுவதும் தமிழின முன்னேற்றத்திற்கான படைப்புகளை வழங்கி எழுச்சியூட்டியவர் ____________

[A] உ.வே.சாமிநாதன் [B] திரு.வி.க
[C] தாராபாரதி [D] சாலை.இளந்திரையன்

**39.** பின்வருவனவற்றுள் ஒலிமரபில் தவறானது

[A] பூனை சீற புறா குனுக யானை பிளிறியது
[B] குயில் கூவ குரங்கு அலப்ப சிங்கம் முழங்கியது
[C] கிளி பேச குதிரை கனைக்க எருது எக்காளமிடும்
[D] எலிக்கத்த வண்டு முரல ஆடு கத்தும்

**40.** வெண்பாவின் பொது இலக்கணம் பெற்று இரண்டு அடிகளைக் கொண்டதாய் வருவது ____________

[A] குறள் வெண்பா
[B] இன்னிசைவெண்பா
[C] நேரிசை சிந்தியல் வெண்பா
[D] சிந்தியல் வெண்பா

**41.** பின்வருவனவற்றுள் பொருத்தமற்றது

[I] எங்கள் பள்ளிக்கு சுற்றுச்சுவர் எழுப்பப்பட்டது
[II] பாரதியார் செய்யுளை இயற்றினார்
[III] வேடன் செலுத்திய அம்பு யானையை வீழ்த்தியது
[IV] மாறன் ஓவியத்தை புனைந்தான்

[A] I [B] II
[C] IV [D] III

**42.** சமூக சீர்திருத்தக்கருத்துக்களை விதைத்துப் பயிராக்கி மகிழ்ந்தவர் யார் ?

[A] வள்ளலார் [B] அம்பேத்கர்
[C] பெரியார் [D] அய்யோத்திதாசர்

**43.** இதழாசிரியர், இறையன்பர், ஞானாசிரியர்,அருளாசிரியர் என்று நாம் யாரை அழைக்கிறோம் ____________

[A] வள்ளலார் [B] பெரியார்
[C] விவேகானந்தர் [D] அய்யோத்திதாசர்

**44.** அறிவு ஒளிபெற அங்கே சோதி தரிசன புதுமையை புகுத்தியவர் யார் ?

[A] வள்ளலார் [B] பெரியார்
[C] விவேகானந்தர் [D] பாவாணர்

**45.** "உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்" என்னும் பாடல் இடம்பெற்ற நூலைத் தேர்க

[A] தொல்காப்பியம் [B] பெரியபுராணம்
[C] மனுமுறைகண்டவாசகம் [D] திருவருட்பா

**46.** பொருத்துக :

[A] நிதிதருகவிகை (1) வினைத்தொகை
[B] இவை இவை (2) உவமைத்தொகை
[C] ஒழுகுதல் (3) அடுக்குத்தொடர்
[D] மலரடி (4) தொழிற்பெயர்

[A] 1 3 2 4
[B] 1 3 4 2
[C] 3 4 2 1
[D] 1 2 3 4

**47.** "கற்றறிந்தார் ஏத்தும் கலி" - எந்த நூலைக் குறிக்கும்

[A] கலித்தொகை [B] அகநானூறு
[C] நற்றிணை [D] புறநானூறு

**48.** வளரும் பிள்ளைகளுக்கு வள்ளலார் அருளாதது எது ?

[A] பசித்தோர் முகத்தைப் பாராதிராதே !
[B] குருவை வணங்க கூசி நிற்காதே !
[C] தானம் கொடுப்போரை தடுத்து நிறுத்தாதே !
[D] சங்கடம் தரும் சாதி மதத்தை தள்ளி வைக்காதே !

ARIVU TRUST

49. "ஆயிரம் உண்டிங்கு சாதி எனில் அன்னியர் வந்து புகலென்ன நீதி" என வீர முழக்கமிட்டவர் யார் ?
[A] கண்ணதாசன் [B] பாரதியார்
[C] பாவாணர் [D] பாரதிதாசன்

50. மண்ணாசை கருதிப் போருக்குச் செல்வது ________
[A] வஞ்சித்திணை [B] காஞ்சித்திணை
[C] வெட்சித்திணை [D] வாகைத்திணை

51. உப்புக்காக, உரிமைக்காக, ஒற்றுமைக்காக, சமத்து வத்திற்காக, வன்முறைக்காக, தீண்டாமைக்காக தொடர்ந்து போராடியவர் யார் ? ______________
[A] டாக்டர்.சட்டமாமேதை அம்பேத்கர்
[B] அண்ணல் மகாத்மா காந்தி
[C] தென்னிந்திய சமூக சீர்திருத்தவாதி ஈ.வெ.பெரியார்
[D] காந்தியக்கவிஞர் இராமலிங்கம் பிள்ளை

52. இளைஞர்களின் உள்ளத்தில் நாட்டுப்பற்று, தெய்வப்பற்று, மொழிப்பற்று வளரும்வகையில் கல்வி அமைதல் வேண்டும் என்று விரும்பியவர் யார் ?
[A] பெரியார் [B] மு.வரதராசன்
[C] அம்பேத்கர் [D] மகாத்மாகாந்தி

53. "இறைவனின் திருத்தூதர்" நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்றினை எடுத்தியம்பும் இனிய நூல் ________
[A] சீறாப்புராணம் [B] முதுமொழிமாலை
[C] பைபிள் [D] முகுந்தமாலை

54. பின்வருவனவற்றுள் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகையையில் பொருத்தமற்றது
[A] வள்ளுகிர்ப்புலி [B] வால்குழைத்து
[C] கொலைப்புலி [D] கவயடிக்கேழல்

55. படர்ந்த தெண்டிரைப் பெருக்கெடுத் தெறினதிப்பரப்பகைக்
[A] தெளிந்த கடல்கள் [B] தெளிந்த கடல்நீர்
[C] தெளிந்த அலைகள் [D] வற்றிய குளம்

56. "பகைவரையும் மன்னிக்கும் மாண்பு" பெற்றவர் யார் ?
[A] இயேசுபிரான் [B] பெரியார்
[C] மகாத்மாகாந்தி [D] அம்பேத்கர்

57. "தேனெடுத்தல் கிழங்கு அகழ்தல்" எண்ணிலத்திற்குரிய தொழிலாக சங்ககாலத்தில் வழங்கி வந்துள்ளனர்
[A] குறிஞ்சி [B] முல்லை
[C] மருதம் [D] நெய்தல்

58. கீழ்கண்டவற்றுள் தவறானதைத் தேர்க ?
I. பொருளிலக்கணம் இரண்டு வகைப்படும்
II. அகத்திணைகள் ஐந்து வகைப்படும்
III. சித்திரை,வைகாசி ஆகிய இரண்டும் இளவேனிற்காலம்
IV. மருதநிலத்திற்கு உரிய தெய்வம் முருகன்
V. நெய்தல் நிலத்திற்குரிய பறவைகள் புறா, பருந்து
VI. பெரும்பொழுது (ஓராண்டின் ஆறு கூறுகள்)
VII. சிறுபொழுது (ஒருநாளின் ஆறு கூறுகள்)
VIII. முதலைந்தும் அன்பின் ஐந்திணை ஆகும்
[A] I மற்றும் II
[B] III மற்றும் IV
[C] II , IV மற்றும் V
[D] VI மற்றும் VII

59. பின்வருவனவற்றுள் பொருத்தமற்றதைத் தேர்க
[A] குறிஞ்சி - மலையும் மலைசார்ந்த இடமும்
[B] முல்லை - காடும் காடு சார்ந்த இடமும்
[C] மருதம் - வயலும் வயல்சார்ந்த இடமும்
[D] பாலை - மணலும் மணல்சார்ந்த இடமும்

60. அறிவியல் செய்திகள், உயிரியல் செய்திகள், மருத்துவ செய்திகள் எந்த நூலில் விரவிக்கிடக்கிறது
[A] திருக்குறள் [B] மணிமேகலை
[C] அகத்தியம் [D] திருவாசகம்

61. "உலகம்" என்னும் தமிழ்ச்சொல் ____________ என்னும் அடியாகப் பிறந்தது
[A] உலகு [B] உலவு
[C] தொங்குதல் [D] உளது

62. "அணுவியல் அறிவு" பற்றி கூறியவர்களில் தவறானது
[A] ஔவையார் [B] கபிலர்
[C] கம்பர் [D] இடைக்காடனார்

63. "மழைவளம் குறைந்தால் இச்சமநிலை பிறழும்" எனவே மழையை அமிழ்தம் என்றவர் யார் ?
[A] மாணிக்கவாசகர் [B] ஔவையார்
[C] திருமூலர் [D] திருவள்ளுவர்

64. கூற்று : [A] "அந்தக் கேணியும் எந்திரக் கிணறும்"
காரணம் : [R] எந்திரயானை கிரேக்கத் தொன்மத்தில் குறிப்பிடப்படும் "டிராய்" போருடன் இணைத்துப் பேசப்படும் எந்திரக்குதிரையுடன் ஒத்தது
[A] [A] சரி [A] க்கு [R] சரியான விளக்கம்
[B] [A] சரி [R] சரி [A]க்கு [R] சரியான விளக்கமல்ல
[C] [A] சரி [R] சரி
[D] [A] தவறு [R] சரி

ARIVU TRUST

65. அச்சமில்லை ! அச்சமில்லை ! எனும் பாடலுக்கு முன்னோடியாக இருந்த பாடல் எது ?
[A] அறிவு அற்றம் காக்கும் கருவி
[B] வலவன் ஏவா வானூர்தி
[C] நாமார்க்கும் குடியெல்லாம்
[D] உடம்பார் அழியின் உயிரார் அழிவார்

66. திருக்குறள் என்னும் ஒரு நூல் தோன்றியிராவிட்டால், தமிழ்மொழி என்னும் ஒரு மொழி இருப்பதாக உலகத்தார்க்கு தெரிந்திருக்காது என்று கூறியவர்
[A] கி.ஆ.பெ.விசுவநாதன்
[B] திரு.வி.கல்யாணசுந்தரனார்
[C] அறிஞர் அண்ணா [D] ஜி.யு.போப்

67. அருளென்னும் அன்பீன் குழவி பொருளென்னுஞ் செல்வச் செவிலியால் உண்டு. "பொருள்" என்பது யாரைக்குறிக்கிறது ________
[A] தாய் [B] குழந்தை
[C] வளர்ப்புத்தாய் [D] எதுவுமில்லை

68. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும் பொருளல்ல தில்லை பொருள் - எவ்வகை அணி
[A] பொருள் பின்வரும் நிலையணி
[B] ஏகதேச உருவக அணி
[C] சொல் பின்வருநிலையணி
[D] இரட்டுறமொழிதல் அணி

69. பின்வருவனவற்றுள் பொருத்தமற்றது
[A] பா - வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா
[B] நாற்கரணம் - மணம், புத்தி, சித்தம், அகங்காரம்
[C] நெறினாலு - வைதருப்பம்,கௌடம், பாஞ்சாலம்,மகதம்
[D] நாற்பொருள் - அறம், பொருள், இன்பம், வீடு

70. மரபுத்தொடர்களில் தவறான ஒன்றைத் தேர்க
[A] ஏட்டுச் சுரைக்காய்கறிக்குதவாது - மிகுதியாகப்பேசுதல்
[B] கம்பி நீட்டல் - சொல்லிக்கொள்ளாமல் செல்வது
[C] குட்டிச்சுவர் - பயனின்றி இருத்தல்
[D] கொட்டியளத்தல் - மிகுதியாகப் பேசுதல்

71. பொருத்துக :
1. அடி அகரம் ஐ ஆதல் - மூதூர்
2. ஆதிநீடல் - பைங்கூழ்
3. இனமிகல் - கரும்பலகை
4. தன்னொற்றிரட்டல் - வெற்றிலை
[A] 4 3 2 1 [B] 2 1 3 4
[C] 2 1 4 3 [D] 1 3 4 2

72. Cartoon - சரியான தமிழ்ச்சொல்லைத் தேர்க
[A] கேலிச்சித்திரம் [B] செய்திப்படம்
[C] இயங்குருப்படங்கள் [D] கருத்துப்படம்

73. பெரியபுராணத்தில் இடம்பெற்ற "திங்களூர்" தஞ்சாவூர் மாவட்டத்தில் எந்த ஊருக்கு அருகில் உள்ளது (தியாகராசர் ஆராதனை நடைபெறும்)
[A] திருவைகுண்டம் [B] மாயவரம்
[C] திருப்போரூர் [D] திருவையாறு

74. பின்வருவனவற்றுள் எது / எவை சரி
I. ஓடும் குதிரையை இயக்கப்படமாக எடுத்து வெற்றி பெற்றவர் - எட்வர்டு மைபிரிட்சு
II. ஒருவர் மட்டும் பார்க்கும் படக்கருவியைக் கண்டு பிடித்தவர் - எடிசன்
[A] I தவறு [B] II சரி
[C] I மற்றும் II தவறு [D] I மற்றும் II சரி

75. உலகம், உயிர், கடவுள், ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியந்தான் "பெரியபுராணம்" கூறியவர்
[A] முத்து இராமலிங்கத் தேவர்
[B] மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளை
[C] திரு.வி.கல்யாணசுந்தரம்
[D] அப்பூதியடிகளார்

76. பொருத்துக ;
1. ஒல்லை - விரைவு
2. மல்லல் - பாம்பு
3. அம் - வளமான
4. அரா - அழகிய
[A] 4 3 2 1 [B] 2 1 3 4
[C] 1 3 2 4 [D] 1 3 4 2

77. பொங்குகடல் கல்மிதப்பிற் போந்தேறும் அவர்பெருமை அங்கணர்தம் புவனத்தில் அறியாதார் யாருளரே ! இவ்வரி யாரை நினைவுப்படுத்துகிறது ________
[A] சிவபெருமான் [B] அப்பூதியடிகள்
[C] திருநாவுக்கரசு [D] உமையம்மை

78. "யாகவா ராயினும் நாகாக்க காவாக்கால் சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு" இக்குறள் யாருக்கு ஓட்டுநருக்கா ! நடத்துநருக்கா ! பயணிகளுக்கா ! வினா எழுந்த போது நாக்கு உள்ளவர்களுக்கு என்று கூறியவர்
[A] தேவநேயப்பாவாணர்
[B] மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்
[C] அறிஞர் அண்ணா [D] மு.வரதராசனார்

ARIVU TRUST

79. பின்வருவனவற்றுள் சரியானதைத் தேர்க
[A] அனலிடைப்பட்ட புழுவைப்போல - இன்பம்
[B] அடியற்ற மரம் போல - சாய்தல்
[C] மழை காணாப் பயிர்போல - வாட்டம்
[D] கீரியும் பாம்பும் போல - ஒற்றுமை

80. கீழ்கண்டவற்றுள் எது ஒருபொருட்பன்மொழி அல்ல
[A] உயர்ந்தோங்கி [B] குழிந்தாழ்ந்து
[C] நடு மையம் [D] மிசை ஞாயிறு

81. பின்வருவனவற்றுள் பொருந்தா ஒன்றைத் தேர்க
[A] திருக்குறளை இயற்றியவர் யார் ? ஆசிரியர் மாணவனிடம் வினவுவது - அறிவினா
[B] மாணவர்களே ! உங்களுக்கு சீருடை இல்லையோ - கொளல்வினா
[C] மனப்பாடச் செய்யுளைப்படித்தாயா ? - ஏவல் வினா
[D] "இது செய்வாயா" என்று வினவியபோது, 'நீயே செய்' என்று கூறுவது - ஏவல் விடை

82. "ஆடுவாயா" ?" என்னும் வினாவியபோது, 'பாடுவேன்' என ஆடுவதற்கு இனமான பாடுவதனை விடையாகக்கூறுவது
[A] வினாஎதிர்வினாதல்விடை
[B] மறைவிடை
[C] உறுவதுகூறல்விடை
[D] இனமொழிவிடை

83. சரியான வரிசையை தேர்க
[A] கற்றார்க்கும் கல்லார்க்கும் களிப்பருளும் களிப்பே
[B] கல்லார்க்கும் கற்றார்க்கும் களிப்பருளும் களிப்பே
[C] கற்றார்க்கும் களிப்பருளும் களிப்பே கல்லார்க்கும்
[D] கல்லார்க்கும் களிப்பே களிப்பருளும் கற்றார்க்கும்

84. 1.பெரியபுராணத்திற்கு "உலகெலாம்"என்று அடியெடுத்து கொடுத்தவர்______________
2. "ஒன்றுகொலாம்" பதிகம் பாடியவர் __________
[A] சேக்கிழார் / அப்பூதியடிகள்
[B] திருநாவுக்கரசர் / தில்லைநடராசர்
[C] தில்லைநடராசர் / மருள்நீக்கியார்
[D] மருள்நீக்கியார் / தில்லைநடராசர்

85. என்ன ? எப்படி ? எங்கு ? ஏன் ? என வினாமேல் வினாவைக் கேட்டு விடையறிய விரும்புகின்றவனே சிறந்த அறிவாளியாக முடியும் என்று கூறியவர்
[A] தந்தை பெரியார் / ஹிட்லர்
[B] தந்தை பெரியார் / சாக்ரடிஸ்
[C] தந்தை பெரியார் / விவேகானந்தர்
[D] தந்தை பெரியார் / பாரதியார்

86. ஊர(ஊரனே) - இலக்கணம் தருக
[A] பெயரெச்சம் [B] வினையெச்சம்
[C] வலித்தல் விகாரம் [D] விளித்தொடர்

87. பிறமொழிச்சொற்களுக்குரிய தமிழ்ச்சொல்
[A] இம்மார்க்கத்தில் யாத்திரை செல்லுங்கள்
[B] இந்தவழியில் புனித பயணம் செல்லுங்கள்
[C] இந்தவழியில் யாத்திரை செல்லுங்கள்
[D] இந்த வழியில் கோயிலுக்கு செல்லுங்கள்

88. உரிய வேற்றுமை உருபை இணைத்து எழுதுக
நான் மழையில் நனைவது பிடிக்கும்
[A] கு [B] ஆல் [C] ஐ [D] இன்

89. I.வடமொழி எழுத்தையும் பிறமொழி கலப்பையும் தடுத்தவர் யார் ?
II. உலகில் நாகரகம் முற்றும் அழிந்து விட்டாலும் ........
[A] கபிலர் / திராவிட சாஸ்திரி
[B] கம்பர் / சூரியநாராயண சாஸ்திரி
[C] கம்பர் / கால்டுவெல்
[D] கபிலர் / வீரமாமுனிவர்

90. தீராக் காதல னாகும் என்று கருணையின் மலர்ந்த கண்ணன் அடிக்கோடிட்டது யார்
[A] சிவன் [B] இராமன்
[C] குகன் [D] சொல்லின் செல்வன்

91. விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அணையா என்று ஆங்கிலேயருக்கு இவ்வுவமையை எடுத்துக்காட்டாக கூறியவர் யார் ?
[A] கம்பர் [B] கபிலர்
[C] சூரியநாராயண சாஸ்திரி [D] மில்லர்

92. விடுநனி கடிதென்றான் மெய்உயிர் அணையானும் முடுகினன் நெடுநாவாய்
[A] விரைவாக [B] செலுத்தினான்
[C] வேகமாக [D] நிருத்தினான்

93. தழீஇய (தழுவிய) இலக்கணம் தருக
[A] வியங்கோள்வினைமுற்று
[B] சொல்லிசை அளபெடை
[C] இன்னிசை அளபெடை [D] ஒற்றளபெடை

94. பெரியார் கூறாதது :
[A] ஆணுக்கு பெண் இளைப்பில்லை
[B] பெண்ணினுள் ஆணும் ஆணினுள் பெண்
[C] பெண்களே சமூகத்தின் கண்கள்
[D] ஆண்கள் பெண்களை படிக்கவைக்க வேண்டும்

ARIVU TRUST

**95.** "எளிமையினால் ஒரு தமிழன் படிப்பில்லை யென்றால் இங்குள்ள எல்லாரும் நாணிடவும்"

[A] பாரதிதாசன் [B] பாரதியார்
[C] அம்பேத்கர் [D] பெரியார்

**96.** சந்திப்பிழையற்ற தொடர் எது ?

[A] கயிறுகட்டிலில் தன்னை மறந்து
[B] கயிற்றுக்கட்டிலில் தன்னை மறந்து
[C] கயிற்றுகட்டிலில் தன்னை மறந்து
[D] இவற்றுள் எதுவுமில்லை

**97.** "ஞானக்கண்"- இலக்கணம் தருக

[A] உவமைத்தொகை [B] உருவகம்
[C] உம்மைத்தொகை [D] வினைத்தொகை

**98.** "கைதான் தலைவைத்துக் கண்ணீர் ததும்பி வெதும்பி <u>உள்ளம்</u>"- உள்ளம் என்பதற்கான சரியான சொல் எது ?

[A] மனம் [B] மணம்
[C] கனம் [D] கணம்

**99.** 'நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம்' என்று பாடியவர் __

[A] பாரதிதாசன் [B] கவிமணி
[C] பாரதியார் [D] பாவேந்தர்

**100.** மண்டைச் சுரப்பை உலகு தொழும் <u>மனக்குகையில்</u> சிறுத்தை எழும். 'மனக்குகை' இலக்கணம் தருக

[A] உவமைத்தொகை [B] உருவகம்
[C] உம்மைத்தொகை [D] பண்புத்தொகை




**அடுத்த வாரம் "பதினொன்றாம் வகுப்பு" தமிழ் பதிவேற்றம் செய்யப்படும் ____**

## (10th STD – TAMIL - ANSWER KEY)

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 C | 2 B | 3 D | 4 C | 5 A | 6 D | 7 A | 8 A | 9 C | 10 A |
| 11 C | 12 B | 13 A | 14 D | 15 C | 16 D | 17 B | 18 A | 19 B | 20 A |
| 21 A | 22 B | 23 C | 24 A | 25 C | 26 A | 27 A | 28 D | 29 C | 30 B |
| 31 C | 32 D | 33 D | 34 A | 35 D | 36 B | 37 A | 38 D | 39 D | 40 A |
| 41 D | 42 D | 43 A | 44 A | 45 B | 46 B | 47 A | 48 D | 49 B | 50 A |
| 51 B | 52 D | 53 A | 54 B | 55 C | 56 B | 57 A | 58 C | 59 D | 60 D |
| 61 B | 62 B | 63 D | 64 A | 65 C | 66 A | 67 C | 68 C | 69 B | 70 A |
| 71 B | 72 D | 73 D | 74 D | 75 C | 76 D | 77 C | 78 C | 79 C | 80 D |
| 81 B | 82 D | 83 B | 84 C | 85 B | 86 D | 87 B | 88 A | 89 A | 90 C |
| 91 C | 92 B | 93 B | 94 B | 95 A | 96 B | 97 A | 98 A | 99 C | 100 B |

ARIVU TRUST

ARIVU TRUST